## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.6/2021.
Prosecution witness for P.W. 4 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. முருகன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.01.2026.

All Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கோவில்பட்டி வீரவாஞ்சி நகரில் குடியிருந்து ஆட்டோ ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பத்தை எங்கு, எப்போது, எதற்கான போட்டேன் என்று தெரியாது. பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அவை முறையே **அ.சா.ஆ 4 மற்றும் 5**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 11.03.2011 அன்று இரவு 7 மணியளவில் கோவில்பட்டி ஸ்ரீராம் நகரில் போலீசார் கிருஷ்ணசாமி பாண்டியன் என்பவரது வீட்டில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரித்த போதும் சம்பவ இடத்திலிருந்து எரிந்த மரக்கட்டை மற்றும் சாம்பல்

கொஞ்சம், உடைந்த ஆஸ்பெட்டாஷ் கூரை ஓடுகள், உடைந்த சிவப்பு கருப்பு நிறமுள்ள நேஷனல் டேப் ரெக்கார்டர் ஆகியவற்றை மகஜரில் கைப்பற்றும் போதும் நானும், அ.சா.3 ம் உடனிருந்து அதில் கையொப்பமிட்டதாக சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.01.27 18:31:11 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.